# மொழிப் பாடம் - தமிழ் -தாள் -3 (S1TL31)

மூன்றாம் பருவம் இணைய வகுப்பு I

# யாப்பிலக்கணம்

முனைவர் பா. மலர்,

உதவிப் பேராசிரியர்,

தமிழ்க் கலை ஆய்வகம் ,தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி,

நாகர்கோவில் - 2

# தாள் - 3

- செய்யுள், இலக்கணம், உரைநடை, புதினம், இலக்கியவரலாறு.
- அலகு 1 : செய்யுள் பகுதி
- அலகு 2 : இலக்கணம்
- இவ்விரு அலகுகளும் பல்கலைக்கழகத் தொகுப்பிலிருந்து கற்பிக்கப்படும்.

# அலகு 1 : செய்யுள் பகுதி

- செய்யுள் பாடப்பகுதிகள் காப்பியம், சிற்றிலக்கியம் பொருளடக்கம்
- 1. சிலப்பதிகாரம் : வழக்குரை காதை
- 2. மணிமேகலை : சிறைக் கோட்டம் அறக்கோட்டமாக்கிய காதை
- 3. சீவகசிந்தாமணி : முக்தி இலம்பகம்
- 4. கம்பராமாயணம் : குகப் படலம்
- 5. பெரியபுராணம் : பூசலார் நாயனார் புராணம் முழுவதும்
- 6. சீறாப்புராணம் : பாந்தள் வசனித்தப் படலம்
- 7. இரட்சணிய யாத்திரிகம் : சுமை நீங்கு படலம்
- 8. தமிழ்விடு தூது : (10 கண்ணிகள்)
- 9. திருக்குற்றாலக்குறவஞ்சி : வசந்தவல்லியின் அழகு

# அலகு 2 : இலக்கணம்

- யாப்பு, அணி
- 1. யாப்பு உறுப்புகள் - எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை (விகற்பங்கள் நீங்கலாக)
- 2. பா வகைகள் - வெண்பா, ஆசிரியப்பா – பொது இலக்கணம், வகைமை - சான்று
- அணி இலக்கணம்
- உவமையணி, உருவகவணி, வஞ்சப்புகழ்ச்சி அணி, தற்குறிப்பேற்ற அணி இலக்கிய வரலாறு காப்பியங்களும், சிற்றிலக்கியங்களும்
- 1. ஐம்பெருங்காப்பியங்கள்
- 2. சமணம், பௌத்தம், கிறித்தவம், இசுலாம் சமயங்கள் ஆற்றிய தமிழ்த்தொண்டு
- 3. சிற்றிலக்கியங்களின் தோற்றமும் வளர்ச்சியும் (பிள்ளைத்தமிழ், பரணி, பள்ளு, கலம்பகம்.)


**முனைவர் பா. மலர், உதவிப் பேராசிரியர்,**
தமிழ்க் கலை ஆய்வகம் , தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி, நாகர்கோவில் - 2

# தாள் - 3

- அலகு 3 :
- உரைநடை
- தன்னம்பிக்கைக் கட்டுரைகள்
- வெற்றிப் பாதை
- தொகுப்பு ஆசிரியர் பேரா.க.இராமச்சந்திரன், அறிவுப் பதிப்பகம் (பி) லிட், இராயப்பேட்டை, சென்னை – 600 014.

# தாள் - 3

- அலகு 4 :
- புதினம் : பால்மரக் காட்டினிலே
- ஆசிரியர்.அகிலன் தாகம் பப்ளிகே‘ஷ்ஸ் 34 35, சாரங்கபாணிதெரு தி.நகர், சென்னை – 600 017.


முனைவர் பா. மலர், உதவிப் பேராசிரியர்,
தமிழ்க் கலை ஆய்வகம் ,தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி, நாகர்கோவில் - 2

# தாள் - 3

- அலகு 5 : இலக்கிய வரலாறு காப்பியங்களும், சிற்றிலக்கியங்களும்
- 1. ஐம்பெருங்காப்பியங்கள்
- 2. சமணம், பௌத்தம், கிறித்தவம், இசுலாம் ஆகிய சமயங்கள் ஆற்றிய தமிழ்த்தொண்டு
- 3. சிற்றிலக்கியங்களின் தோற்றமும் வளர்ச்சியும் பிள்ளைத் தமிழ், பரணி, பள்ளு, கலம்பகம்.

# பார்வை நூல்கள்

- இலக்கணம் : யாப்பருங்காலக்காரிகை தொல்காப்பியம் தண்டியலங்காரம்
- இலக்கிய வரலாறு : தமிழ் இலக்கிய வரலாறு
- 1. முனைவர் பெ. சுயம்பு
  பாரதிப்பதிப்பகம், 113, இராஜீவ்தெரு, திசையன்விளை.
- 2. முனைவர் மு. அருணாச்சலம்,
  அருண் பதிப்பகம், திருச்சிராப்பள்ளி.

# இந்த வகுப்பில்.....

- அலகு 2 : இலக்கணம்
- யாப்பிலக்கணம்

# திறவுச் சொற்கள் /சிறப்புச்சொற்கள்

- யாப்பு
- எழுத்து
- மாத்திரை
- அசை
- நேர்
- நேர்பு
- நிரை
- நிரைபு
- சீர்


முனைவர் பா. மலர், உதவிப் பேராசிரியர்,
தமிழ்க் கலை ஆய்வகம் ,தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி, நாகர்கோவில் - 2

# குறு வினாக்கள்

- யாப்பு - விளக்கம்
- யாப்பிலக்கண நூற்கள்
- யாப்பின் உறுப்புகள்
- யாப்பின் எழுத்து
- மாத்திரை என்றால் என்ன?
- அசை என்றால் என்ன?
- சீர் என்றால் என்ன?


முனைவர் பா. மலர், உதவிப் பேராசிரியர்,
தமிழ்க் கலை ஆய்வகம் ,தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி, நாகர்கோவில் - 2

# பெரு வினாக்கள்

- அசையைச் சான்றுகளுடன் விளக்குக.


முனைவர் பா. மலர், உதவிப் பேராசிரியர்,
தமிழ்க் கலை ஆய்வகம் ,தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி, நாகர்கோவில் - 2

# இலக்கணம்

- மொழி என்பது ஒருவரின் கருத்தை வெளியிடவும்,அதை மற்றொருவர் புரிந்து கொள்ளவும் பயன்படுகிறது.
- மொழியைப் பிழையின்றி பேசவும் எழுதவும் துணை செய்வது, இலக்கணம்


முனைவர் பா. மலர், உதவிப் பேராசிரியர்,
தமிழ்க் கலை ஆய்வகம் ,தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி, நாகர்கோவில் - 2

# இலக்கண வகைகள்

- எழுத்து
- சொல்
- பொருள்
- யாப்பு
- அணி

# யாப்பு - விளக்கம்

- யாத்தல் = கட்டுதல்

செய்யுள் இயற்றுவதற்கு உரிய விதிகளையும், விதிவிலக்குகளையும் கூறுவது யாப்பிலக்கணம்.

# யாப்பிலக்கண நூற்கள்

- **தொல்காப்பியரின்**
  - தொல்காப்பியம்
- **அமிர்தசாகரரின்**
  - யாப்பருங்கலக்காரிகை
  - யாப்பருங்கலம்

# யாப்பின் உறுப்புகள்

1. எழுத்து
2. அசை
3. சீர்
4. தளை
5. அடி
6. தொடை

# எழுத்து

- யாப்பிலக்கணத்தில் செய்யுள் அல்லது பாக்களுக்கு அடிப்படையாக அமையும் உறுப்பு எழுத்து ஆகும்.
- இங்கே எழுத்து என்பது மொழியை எழுதுவதற்குப் பயன்படும் குறியீடுகளையன்றி அவற்றினால் குறிக்கப்படும் ஒலிகளையே குறித்து நிற்கின்றது.
- செய்யுள்களைப் பொறுத்தவரை மொழியின் ஒலிப் பண்புகள் சிறப்புப் பெறுகின்றன.
- இதனால் இந்த ஒலிப் பண்புகளுக்கு ஆதாரமாக அமையும் எழுத்துக்களை, அவற்றை ஒலிப்பதற்குத் தேவையான கால அளவுகளைக் கருத்தில் கொண்டு வகைகளாகப் பிரித்துள்ளார்கள்.

# எழுத்தின் வகைகள்

- உயிரெழுத்துக்கள் -
  1 குறில்கள் அ, இ, உ, எ, ஒ
  2 நெடில்கள் ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ
- மெய்யெழுத்துக்கள் க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்
- உயிர்மெய் எழுத்துக்கள் -
  1 குறில்கள் உயிர்க்குறில்கள் சேர்ந்து உருவான உயிர்மெய்கள்
  2 நெடில்கள் உயிர்நெடில்கள் சேர்ந்து உருவான உயிர்மெய்கள்


முனைவர் பா. மலர், உதவிப் பேராசிரியர்,
தமிழ்க் கலை ஆய்வகம் ,தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி, நாகர்கோவில் - 2

# எழுத்துக்களின் கால அளவு

- குறில் எழுத்துக்களின் ஒலி அளவு ஒரு மாத்திரை.
- நெடில் எழுத்துக்களின் கால அளவு இரண்டு மாத்திரை,
- மெய்யெழுத்துக்களின் கால அளவு அரை மாத்திரை.
- உயிர்மெய்க் குறில்களினது கால அளவு ஒரு மாத்திரை,
- உயிர்மெய் நெடில்களினது கால அளவு இரண்டு மாத்திரை.


முனைவர் பா. மலர், உதவிப் பேராசிரியர்,
தமிழ்க் கலை ஆய்வகம் ,தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி, நாகர்கோவில் - 2

# எழுத்தின் வகைகள்...

- உயிர்

குறில் (அ) - 1 மாத்திரை

நெடில் (ஆ) - 2 மாத்திரை

- மெய் (ய்) - 1/2 மாத்திரை
- உயிர்மெய்

குறிலுடன் சேர்ந்த மெய்(க)- 1 மாத்திரை

நெடிலுடன் சேர்ந்த மெய் (மா)-2 மாத்திரை


முனைவர் பா. மலர், உதவிப் பேராசிரியர்,
தமிழ்க் கலை ஆய்வகம் ,தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி, நாகர்கோவில் - 2

# அசை

- எழுத்துகள் சேர்ந்து அசையாக வருகின்றன.
- அசை **நேர் அசை**, **நிரை அசை** என்று இரண்டு வகைப்படும்.
- ஒரு குறில் எழுத்து அல்லது நெடில் எழுத்து, தனியாகவோ மெய் எழுத்துடன் சேர்ந்தோ வருவது **நேர்அசை** எனப்படும்.
- குறில், நெடில் ஆகிய இரண்டும் தொடர்ந்து வருவதும் இரண்டு குறில் எழுத்துகள் தொடர்ந்து வருவதும் **நிரை அசை** ஆகும். இவற்றுக்குப் பின் மெய் எழுத்து வந்தாலும் நிரை அசை ஆகும்.


முனைவர் பா. மலர், உதவிப் பேராசிரியர்,
தமிழ்க் கலை ஆய்வகம் ,தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி, நாகர்கோவில் - 2

# நேர் அசை

1) தனிக்குறில் - க
2) தனிக்குறில் ஒற்று - கல்
3) தனிநெடில் - கா
4) தனிநெடில் ஒற்று - கால்

# நிரை அசை

- 1) இரு குறில் - படி
  2) இருகுறில் ஒற்று - தமிழ்
  3) குறில் நெடில் - பலா
  4) குறில் நெடில் ஒற்று - புலால்

மொழிப் பாடம் - தமிழ் -தாள் -3 (S1TL31)

மூன்றாம் பருவம் இணைய வகுப்பு 02

# யாப்பிலக்கணம்


## முனைவர் பா. மலர்,

**உதவிப் பேராசிரியர்,**

**தமிழ்க் கலை ஆய்வகம் , தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி,**

**நாகர்கோவில் - 2**

# இன்றைய வகுப்பில்

- சீர்

# திறவுச் சொற்கள்

- **சீர்**
- **வாய்ப்பாடு**
- **நேர்பு - நிரைபு**
- **தேமா - புளிமா**
- **கருவிளம் - கூவிளம்**

# குறு வினாக்கள்

- ஓரசைச் சீர்களை விளக்கு
- நேர்பு என்றால் என்ன?
- நிரைபு என்றால் என்ன?
- ஓரசை சீர்களின் வாய்ப்பாடுகளை எழுதுக
-

# பெரு வினாக்கள்

- சீரின் வகைகளைச் சான்றுகளுடன் விளக்குக.
- அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு.
- மேற்கண்ட குறளை அலகிட்டு வாய்ப்பாடு தருக.

# சீர்

- அசைகள் இணைந்து வருவது சீர் .
- ஒரே அசை சீராக இருப்பதும் உண்டு.
- இரண்டு, மூன்று, நான்கு அசைகள் சேர்ந்து சீராக அமைவதும் உண்டு.
- *கற்றதனால் ஆய பயன்என்கொல் வாலறிவன்*
  *நற்றாள் தொழாஅர் எனின்.*
- இத்திருக்குறளில் முதலடியில் நான்கு சீர்களும், அடுத்த அடியில் மூன்று சீர்களும் உள்ளன.

# சீர் வகைகள்

- சீர்கள் நான்கு வகைப்படும். அவை :
- 1.ஓரசைச் சீர்கள்
- 2.ஈரசைச் சீர்கள்
- 3.மூவசைச் சீர்கள்
- 4.நாலசைச் சீர்கள்

# சீர் வகைகள்

| வகை | சீர்கள் | வேறு பெயர்கள் |
|---|---|---|
| 1 | ஓரசைச்சீர் | அசைச்சீர் |
| 2 | ஈரசைச்சீர் | இயற்சீர், ஆசிரியச்சீர், ஆசிரிய உரிச்சீர் |
| 3 | மூவசைச்சீர் | உரிச்சீர் |
| 4 | நாலசைச்சீர் | பொதுச்சீர் |

# ஓரசைச் சீர்

- ஓரசையால் ஆகிய சீர் ஓரசைச்சீர் எனப்படும். இதனை அசைச்சீர் என்றும் கூறுவர்.
- வெண்பாவின் இறுதி ஓரசைச்சீரால் முடிதலும் உண்டு.
- நேரசையாகவோ நிரையசையாகவோ தனித்து நின்று சீராக அமையும்.
- நேரசைக்கு **"நாள்"** என்பதும்,
- நிரையசைக்கு **"மலர்"** என்பதும் வாய்பாடுகளாகும்.

# ஓரசைச் சீர்

- நேர் அசை - க, கல், கா, கால்
- நிரை அசை- கடு, கடல், பலா, வரால்
- (எ-டு)
- நேர் (நாள்)
  - வாலெயி லூறிய **நீர்**.
- நிரை (மலர்)
  - நெஞ்சத் தவல **மிலர்**

# ஓரசைச் சீர் - நேர்பு

- வெண்பாவின் இறுதி அசையாக வரும் நேரசையுடன் குற்றியலுகர எழுத்துக்கள் ( கு , சு டு, து, பு, று) வந்தால் ஓரசையாகக் கருதப்படும்.இதனை நேர்பு என்பர்

- இதன் வாய்ப்பாடு காசு

# ஓரசைச் சீர் - நிரைபு

- **வெண்பாவின் இறுதி அசையாக வரும் நிறையசையுடன் குற்றியலுகர எழுத்துக்கள் (கு , சு டு, து, பு, று) வந்தால் ஓரசையாகக் கருதப்படும்.இதனை நிரைபு என்பர்**

- **இதன் வாய்ப்பாடு பிறப்பு**

# ஈர் அசைச் சீர்

- இரண்டு அசைகள் சேர்ந்து வருவது ஈரசைச் சீர்.

| சீர் | வாய்ப்பாடு | |
|---|---|---|
| நேர், நேர் | தேமா | |
| நிரை, நேர் | புளிமா | மாச்சீர் |
| நிரை, நிரை | கருவிளம் | |
| நேர், நிரை | கூவிளம் | விளச்சீர் |

# ஈர் அசைச் சீர்

(எ-டு)

| | | |
|---|---|---|
| குன்/றக் | - | நேர், நேர் |
| குற/வன் | - | நிரை, நேர் |
| மட/மகள் | - | நிரை, நிரை |
| சா/யலள் | - | நேர், நிரை |

# மூவசைச் சீர்

- மூன்று அசைகள் சேர்ந்து வருவது **மூவசைச் சீர்**

1. காய்ச்சீர்
2. கனிச்சீர்

# காய்ச்சீர் (வெண்பா உரிச்சீர்)

- ஈரசைச்சீர் நான்கினோடும் நேரசை சேர்ந்தால் வருகின்ற மூவசைச்சீர் நான்கு.

| சீர் | | வாய்பாடு |
|---|---|---|
| நேர், நேர், நேர் | - | தேமாங்காய் |
| நிரை, நேர், நேர் | - | புளிமாங்காய் |
| நிரை, நிரை, நேர் | - | கருவிளங்காய் |
| நேர், நிரை, நேர் | - | கூவிளங்காய் |

# காய்ச்சீர் (வெண்பா உரிச்சீர்)

(எ-டு)

| | | |
|---|---|---|
| கிள்/ளி/பேர் | - | நேர், நேர், நேர் |
| புன/னா/டன் | - | நிரை, நேர், நேர் |
| புனை/கழற்/காற் | - | நிரை, நிரை, நேர் |
| ஊழ்/உலக்/கை | - | நேர், நிரை, நேர் |

# கனிச்சீர் (வஞ்சி உரிச்சீர்)

- ஈரசைச்சீர் நான்கினோடும் நிரையசை சேர்ந்தால் வருகின்ற மூவசைச்சீர் நான்கு.

| சீர் | | வாய்ப்பாடு |
|---|---|---|
| நேர், நேர், நிரை | - | தேமாங்கனி |
| நிரை, நேர், நிரை | - | புளிமாங்கனி |
| நிரை, நிரை, நிரை | - | கருவிளங்கனி |
| நேர், நிரை, நிரை | - | கூவிளங்கனி |

# கனிச்சீர் (வஞ்சி உரிச்சீர்)

(எ-டு)

| | | |
|---|---|---|
| பூந் /தா/மரைப் | - | நேர், நேர், நிரை |
| வினைக் /கம் /பலை | - | நிரை, நேர், நிரை |
| வள/வய/லிடை | - | நிரை, நிரை, நிரை |
| போ/தல/மரத் | - | நேர், நிரை, நிரை |

# நாலசைச் சீர்

- நான்கு அசைகள் சேர்ந்து வருவது நாலசைச் சீர்எனப்படும்.
- நேர் அசையில் முடியும் நாலசைச் சீர் எட்டும், நிரை அசையில் முடியும் நாலசைச் சீர் எட்டும் ஆக நாலசைச் சீர்கள் பதினாறு ஆகும்.
- நாலசைச் சீர்களுக்கு வாய்பாடு கூறும்போது இறுதியில் நேர் வந்தால் தண் பூ, நறும் பூ என்றும் இறுதியில் நிரைவந்தால் தண்ணிழல், நறு நிழல் என்றும் வாய்பாடு கூறுவர்.

# பூச்சீர் - தண்பூ

| | | |
|---|---|---|
| நேர் நேர் நேர் நேர் | - | தேமாந்தண்பூ |
| நிரை நேர் நேர் நேர் | - | புளிமாந்தண்பூ |
| நிரை நிரை நேர் நேர் | - | கருவிளந்தண்பூ |
| நேர் நிரை நேர் நேர் | - | கூவிளந்தண்பூ |

# பூச்சீர் - நறும்பூ

| | | |
|---|---|---|
| நேர் நேர் நிரை நேர் | - | தேமா நறும்பூ |
| நிரை நேர் நிரை நேர் | - | புளிமா நறும்பூ |
| நிரை நிரை நிரை நேர் | - | கருவிள நறும்பூ |
| நேர் நிரை நிரை நேர் | - | கூவிள நறும்பூ |

# நிழற்சீர் - தண்ணிழல்

| | | |
|---|---|---|
| நேர் நேர் நேர் நிரை | - | தேமாந்தண்ணிழல் |
| நிரை நேர் நேர் நிரை | - | புளிமாந்தண்ணிழல் |
| நிரை நிரை நேர் நிரை | - | கருவிளந்தண்ணிழல் |
| நேர் நிரை நேர் நிரை | - | கூவிளந்தண்ணிழல் |

# நிழற்சீர் - நறுநிழல்

| | | |
|---|---|---|
| நேர் நேர் நிரை நிரை | - | தேமா நறுநிழல் |
| நிரை நேர் நிரை நிரை | - | புளிமா நறுநிழல் |
| நிரை நிரை நிரை நிரை | - | கருவிள நறுநிழல் |
| நேர் நிரை நிரை நிரை | - | கூவிள நறுநிழல் |

# ஓரசைச்சீர்கள்

| | | |
|---|---|---|
| 1. | நேர் | நாள் |
| 2. | நிரை | மலர் |
| 3 | நேர்பு | காசு |
| 4 | நிரைபு | பிறப்பு |

# ஈரசைச்சீர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | நேர்-நேர் | தேமா | தே.மா |
| 2. | நிரை-நேர் | புளிமா | புளி.மா |
| 3. | நிரை-நிரை | கருவிளம் | கரு.விளம் |
| 4. | நேர்-நிரை | கூவிளம் | கூ.விளம் |

# மூவசைச்சீர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | நேர்-நேர்-நேர் | தேமாங்காய் | தே.மாங்.காய் |
| 2. | நேர்-நேர்-நிரை | தேமாங்கனி | தே.மாங்.கனி |
| 3. | நிரை-நேர்-நேர் | புளிமாங்காய் | புளி.மாங்.காய் |
| 4. | நிரை-நேர்-நிரை | புளிமாங்கனி | புளி.மாங்.கனி |
| 5. | நிரை-நிரை-நேர் | கருவிளங்காய் | கரு.விளங்.காய் |
| 6. | நிரை-நிரை-நிரை | கருவிளங்கனி | கரு.விளங்.கனி |
| 7. | நேர்-நிரை-நேர் | கூவிளங்காய் | கூ.விளங்.காய் |
| 8. | நேர்-நிரை-நிரை | கூவிளங்கனி | கூ.விளங்.கனி |

# நாலசைச்சீர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | நேர்-நேர்-நேர்-நேர் | தேமாந்தண்பூ | தே.மாந்.தண்.பூ |
| 2. | நேர்-நேர்-நேர்-நிரை | தேமாந்தண்ணிழல் | தே.மாந்.தண்.ணிழல் |
| 3. | நேர்-நேர்-நிரை-நேர் | தேமாநறும்பூ | தே.மா.நறும்.பூ |
| 4. | நேர்-நேர்-நிரை-நிரை | தேமாநறுநிழல் | தே.மா.நறு.நிழல் |
| 5. | நிரை-நேர்-நேர்-நேர் | புளிமாந்தண்பூ | புளி.மாந்.தண்.பூ |
| 6. | நிரை-நேர்-நேர்-நிரை | புளிமாந்தண்ணிழல் | புளி.மாந்.தண்.ணிழல் |
| 7. | நிரை-நேர்-நிரை-நேர் | புளிமாநறும்பூ | புளி.மா.நறும்.பூ |
| 8. | நிரை-நேர்-நிரை-நிரை | புளிமாநறுநிழல் | புளி.மா.நறு.நிழல் |

# நாலசைச்சீர்கள்...

| | | | |
|---|---|---|---|
| 9. | நேர்-நிரை-நேர்-நேர் | கூவிளந்தண்பூ | கூ.விளந்.தண்.பூ |
| 10. | நேர்-நிரை-நேர்-நிரை | கூவிளந்தண்ணிழல் | கூ.விளந்.தண்.ணி ழல் |
| 11. | நேர்-நிரை-நிரை-நேர் | கூவிளநறும்பூ | கூ.விள.நறும்.பூ |
| 12. | நேர்-நிரை-நிரை-நிரை | கூவிளநறுநிழல் | கூ.விள.நறு.நிழல் |
| 13. | நிரை-நிரை-நேர்-நேர் | கருவிளந்தண்பூ | கரு.விளந்.தண்.பூ |
| 14. | நிரை-நிரை-நேர்-நிரை | கருவிளந்தண்ணிழ ல் | கரு.விளந்.தண்.ணி ழல் |
| 15. | நிரை-நிரை-நிரை-நேர் | கருவிளநறும்பூ | கரு.விள.நறும்.பூ |
| 16. | நிரை-நிரை-நிரை-நிரை | கருவிளநறுநிழல் | கரு.விள.நறு.நிழல் |

## மொழிப் பாடம் - தமிழ் -தாள் -3 (S1TL31)

## மூன்றாம் பருவம்  இணைய வகுப்பு 03

# யாப்பிலக்கணம்

**முனைவர்  பா. மலர்,**

**உதவிப் பேராசிரியர்,**

**தமிழ்க் கலை  ஆய்வகம் , தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி,**

**நாகர்கோவில் - 2**

# இந்த வகுப்பில்

- தளை
- தளை - வகைகள்

முனைவர்  பா. மலர், உதவிப் பேராசிரியர்,
தமிழ்க் கலை  ஆய்வகம் , தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி, நாகர்கோவில் - 2

# திறவுச் சொற்கள்

- தளை
- ஒன்றிய தளை
- ஒன்றா தளை

# குறு வினா

- தளை என்றால் என்ன?
- ஒன்றிய தளைகள் எவை ?
- ஒன்றா தளைகள் என்றால் என்ன?
- கலித்தளை - விளக்குக .
- ஆசிரிய தளைகள் எவை ?


# பெரு வினாக்கள்

- தளைகள் எத்தனை ? சான்றுகளுடன் விளக்குக.

# தளை

- சீர்கள் ஒன்றுடன் ஒன்று இயைந்து கட்டுப்பட்டு நிற்பது தளை எனப்படும்.
- தளை என்பதற்குப் பிணைத்தல் அல்லது கட்டுதல் என்பது பொருள்.
- சீரும் சீரும் சேர்ந்து ஒலிக்கிற பொழுது தோன்றுவது தளை.

# தளை – ஒரு சான்று




முனைவர் பா. மலர், உதவிப் பேராசிரியர்,
தமிழ்க் கலை ஆய்வகம் , தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி, நாகர்கோவில் - 2

# தளை இலக்கணம்

- முதற்சீரின் கடைசி அசையும் வரும் சீரின் முதல் அசையும் கூடும் நிலையில்தான் இத் தளை அமைகிறது.
- முதல் சீர், யாப்பில் 'நின்றசீர்' என்னும் சொல்லால் குறிக்கப்படும். அதை அடுத்து வரும்சீர், 'வரும்சீர்' என்று சுட்டப்பெறும்.
- ஓர் அடியில் நான்கு சீர் உள்ளன என்றால், இடையே மூன்று தளைகள் தோன்றும்.

# ஏழு தளைகள்

- 1. நேரொன்றாசிரியத் தளை,
- 2. நிரையொன்றாசிரியத் தளை,
- 3. இயற்சீர் வெண்டளை,
- 4. வெண்சீர் வெண்டளை,
- 5. கலித்தளை,
- 6. ஒன்றிய வஞ்சித்தளை,
- 7. ஒன்றாத வஞ்சித்தளை

# ஆசிரியத் தளைகள்

- ஆசிரியப்பாவில் வரும் தளைகள் ஆசிரியத் தளைகள் எனப்படும். அவை,

1. நேரொன்று ஆசிரியத் தளை
2. நிரையொன்று ஆசிரியத் தளை

# நேரொன்று ஆசிரியத் தளை

- மா முன் நேர்
- தேமா, புளிமா என்னும் ஈரசைச் சீர்கள் இரண்டையும் மாச்சீர் எனக் கூறலாம்.
- நின்றசீர் மாச்சீராக இருந்து வரும் சீரின் முதலசை 'நேர்' என இருந்தால் பிறப்பது நேரொன்று ஆசிரியத் தளை

# நேரொன்று ஆசிரியத் தளை சான்று

- அன்பும் பண்பும்
  நின்றசீர் வரும்சீர்
- அன் /பும் பண்/பும்
- நேர் நேர் + நேர்(வரும்சீரின் முதலசை)
- தேமா முன் நேர் (மா முன் நேர்)
- நேரும் நேரும் ஒன்றியதால்
  நேரொன்று ஆசிரியத் தளை

(மா முன் நேர்)

# நேரொன்று ஆசிரியத் தளை சான்று

- அருளும் பண்பும்

  நின்றசீர் வரும்சீர்

- அரு / ளும் பண்/ பும்
- <u>நிரை நேர்</u> + நேர்(வரும்சீரின் முதலசை)
- புளிமா முன் நேர் (மா முன் நேர்)
- நேரும் நேரும் ஒன்றியதால் நேரொன்று

  ஆசிரியத் தளை (மா முன் நேர்)

# நிரையொன்று ஆசிரியத் தளை

- கருவிளம், கூவிளம் என்னும் ஈரசைச் சீர்கள் இரண்டையும் விளச்சீர் எனலாம்.
- நின்றசீர் விளச்சீராக இருந்து, வரும் சீரின் முதலசை 'நிரை' என இருந்தால் பிறப்பது நிரையொன்று ஆசிரியத் தளை (விளமுன் நிரை)

# நிரையொன்று ஆசிரியத் தளை சான்று

- அன்பினால் அரவணை
- நின்றசீர் வருஞ்சீர்
- அன் /பினால் அர/வணை
- நேர் நிரை + நிரை (கூவிளம் முன் நிரை)
- பலர்புகழ் கபிலர்
- நின்றசீர் வருஞ்சீர்
- பலர் / புகழ் கபி /லர்
- நிரை / நிரை + நிரை (கருவிளம் + நிரை)
- விளச்சீர் முன் நிரை = நிரையொன்று ஆசிரியத் தளை

# வெண்டளை

- வெண்பாவிற்கு உரிய தளை.
- இது இரு வகைப்படும்.
- 1.இயற்சீர் வெண்டளை
- 2.வெண்சீர் வெண்டளை

# 1.இயற்சீர் வெண்டளை

- மாச்சீர் (தேமா,புளிமா) முன் 'நிரை' வரினும்
- விளச்சீர் (கருவிளம்,கூவிளம்) முன் 'நேர் வரினும்
- இயற்சீர் வெண்டளை
- மாமுன் நிரை,விளமுன் நேர்

# இயற்சீர் வெண்டளை

- நுண் / மாண் நுழை / புலம்

நேர் / நேர் + நிரை /

தேமா + நிரை (மா முன் நிரை)

- பெருங் / கடல் நீந் / துவர்

நிரை நிரை நேர்

கருவிளம் + நேர் (விளம் முன் நேர்)

முனைவர் பா. மலர், உதவிப் பேராசிரியர்,
தமிழ்க் கலை ஆய்வகம் , தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி, நாகர்கோவில் - 2

# 2.வெண்சீர் வெண்டளை

வெண்பாவிற்கு உரிய தளை.

மூவசைச்சீர்களான

காய்ச்சீர்(தேமாங்காய்,புளிமாங்காய் ,

கருவிளங்காய் , கூவிளங்காய் ) முன்னர்

வரும் சீரில் முதலசை நேரசை வந்தால்

அது வெண்சீர் வெண்டளை.

காய் முன் நேர்

# 2.வெண்சீர் வெண்டளை

- *யா/தா /னும் நா /டா/மால்*
- நேர் நேர் நேர் நேர்
- தேமாங்காய் + நேர்
- காய் முன் நேர்

# வெண்டளை

- 1.இயற்சீர் வெண்டளை
  - மாமுன் நிரை,விளமுன் நேர்
- 2.வெண்சீர் வெண்டளை
  - காய் முன் நேர்

# வஞ்சித்தளை

- வஞ்சிப்பாவில் அமையும் தளை.
- இது இரு வகைப்படும்.

1. ஒன்றிய வஞ்சித்தளை
2. ஒன்றா வஞ்சித்தளை

# ஒன்றிய வஞ்சித்தளை

- நிரையசையில் முடியும் மூவசைச்சீர் நான்கும் (தேமாங்கனி புளிமாங்கனி கருவிளங்கனி கூவிளங்கனி ) கனிச்சீர் எனப்படும்.
- இவை நின்ற சீராக இருக்க, வரும்சீரின் முதலசை நிரை என இருப்பின் ஒன்றிய வஞ்சித்தளை (கனி முன் நிரை)

# ஒன்றிய வஞ்சித்தளை

- நின்ற சீர் வரும்சீர்
- வெண்/சா/மரை புடை/பெயர்/தரச்

  நேர் நேர் நிரை நிரை
- தேமாங்கனி + நிரை
- கனி முன் நிரை

# ஒன்றாத வஞ்சித்தளை

- நிரையசையில் முடியும் மூவசைச்சீர் நான்கும் (தேமாங்கனி புளிமாங்கனி கருவிளங்கனி கூவிளங்கனி ) கனிச்சீர் எனப்படும்.
- இவை நின்றசீராக இருக்க, வரும்சீரின் முதலசை நேரசையாக இருப்பின் ஒன்றாத வஞ்சித்தளை . (கனி முன் நேர்)

# ஒன்றாத வஞ்சித்தளை

- நின்ற சீர வரும்சீர்
- மந்/தா/நிலம் வந்/தசைப்/ப

நேர் நேர் நிரை நேர்

தேமாங்கனி + நேர்

- (கனி முன் நேர்)

# கலித்தளை

- நேர் அசையில் முடியும் மூவசைச்சீர் (தேமாங்காய் புளிமாங்காய் கருவிளங்காய் கூவிளங்காய்) நான்கும் வெண்பாவிற்குரியன.
- இவற்றின் முன் நிரையசை வந்தால் கலித்தளை. கலிப்பாவிற்கு உரிய தளை.
- காய்ச்சீர், நின்றசீராக இருக்க வரும்சீரின் முதலசையாக நிரையசை இருப்பின் கலித்தளை

**(காய் முன் நிரை)**

# கலித்தளை

- நின்றசீர் வரும்சீர்
- *நீராருங் கடலுடுத்த*

நீ / ரா / ருங் கட /லுடுத் / த

நேர் நேர் நேர் நிரை

தேமாங்காய் + நிரை

- **(காய் முன் நிரை)**

# ஒன்றிய தளைகள்

- நேரொன்று ஆசிரியத் தளை
- நிரையொன்று ஆசிரியத் தளை
- வெண்சீர் வெண்டளை
- ஒன்றிய வஞ்சித்தளை

# ஒன்றாத தளைகள்

- இயற்சீர் வெண்டளை
- ஒன்றாத வஞ்சித்தளை
- கலித்தளை

மொழிப் பாடம் - தமிழ் -தாள் -3 (S1TL31)

மூன்றாம் பருவம் இணைய வகுப்பு 04

# யாப்பிலக்கணம்


முனைவர் பா. மலர்,

உதவிப் பேராசிரியர், தமிழ்க் கலை ஆய்வகம் ,

தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி,

நாகர்கோவில் - 2

# இந்த வகுப்பில்...

- அடி
- தொடை

# திறவுச் சொற்கள்

- அடி
- தொடை
- மோனை,
- எதுகை,
- இயைபு,
- அளபெடை,
- முரண்,
- இரட்டை,
- அந்தாதி,
- செந்தொடை.

# குறு வினா

- அடி என்றால் என்ன?
- அடியின் வகைகள் எவை?
- சிந்தடியை விளக்குக.
- மோனைத் தொடையை விளக்குக.
- செந்தொடை என்றால் என்ன சான்றுடன் விளக்குக.

# பெரு வினாக்கள்

- அடியின் வகைகளைச் சான்றுடன் விளக்குக.
- தொடையின் வகைகள் எவை? சான்றுகளுடன் விளக்குக

# அடி

- சீர்கள் சேர்ந்து நிற்பது 'அடி'.
- அடி என்பது செய்யுளில் இடம்பெறும் ஒரு வரியைக் குறிக்கும்.
- பல அடிகள் சேர்ந்து ஒரு செய்யுளாக வரும்.
- அடிகளே செய்யுளை வகைப்படுத்துவதில் முக்கிய இடம் வகிக்கின்றன.
- அடியில் வரும் சீரின் எண்ணிக்கைக்கு ஏற்ப அடிகள் பல வகைப்படும்

# அடி

- பொதுவாக பாடல்களின் அடிகளில் இரண்டு சீர்கள் முதல் பதினாறு சீர்கள் வரை காணக்கூடியதாக உள்ளது.
- இவ்வாறு வெவ்வேறு எண்ணிக்கையான சீர்களைக் கொண்டு அமைந்த அடிகள் வெவ்வேறு பெயர்களினால் குறிப்பிடுகின்றன.
- செய்யுள் அல்லது பாக்கள் யாவும் அடிகளைக் கொண்டு விளங்குபவையே.
- பாடலைச் சொல்லும் போது வரிகள் அல்லது சொற்கள் என்று கூறாமல், அடிகள், சீர்கள் என்றே விளிக்க வேண்டும்.

# அடியின் வகைகள்

- பொதுவாக பாவினங்களில் அடிகள் ஐந்து வகைப்படும்:

1. குறளடி - இரண்டு சீர்கள் கொண்டது.
2. சிந்தடி - மூன்று சீர்கள் கொண்டது.
3. அளவடி - நான்கு சீர்கள் கொண்டது.
4. நெடிலடி - ஐந்து சீர்கள் கொண்டது
5. கழி நெடிலடி - ஆறு, ஏழு அல்லது எட்டு சீர்களைக் கொண்டது.

# குறளடி

- ஓர் அடியில் இரண்டு சீர்கள் கொண்டது குறளடி.
- இரண்டு சீர் --> 'குறளடி' எடுத்துக் காட்டு

1 2

- *'ஆறுவது சினம்'* (ஆத்திச்சூடி)

# சிந்தடி

- ஓர் அடியில் மூன்று சீர்கள் கொண்டது சிந்தடி.
- மூன்று சீர் --> சிந்தடி எடுத்துக்காட்டு
- **1** **2** **3**
- ‘*பகவன் முதற்றே உலகு*’ (திருக்குறள்)

# அளவடி

- ஓர் அடியில் நான்கு சீர்கள் கொண்டது அளவடி.
- நான்கு சீர்கள் --> அளவடி.
- எடுத்துக்காட்டு
- 1 2 3 4
- *அகர முதல எழுத்தெல்லாம் ஆதி*
  - (திருக்குறள்)

# நெடிலடி

- ஓர் அடியில் ஐந்து சீர்கள் கொண்டது நெடிலடி.
- **ஐந்து சீர்கள் > நெடிலடி**
- எடுத்துக்காட்டு
- 1 2 3 4 5
- **"வென்றான் வினையின் தொகைநீங்க விரிந்து தன்கண்**

# கழி நெடிலடி

- ஓர் அடியில் ஆறு, ஏழு அல்லது எட்டு சீர்களைக் கொண்டது கழி நெடிலடி. எடுத்துக்காட்டு
- 1 2 3 4 5 6
- திருமண மக்கள் நல்ல திருவேந்திப் புகழும் ஏந்திப்
- பருதியும் நிலவும் போலப் பல்லாண்டு வாழ்நாள் ஏந்திக்
- கருவிலே தமிழ்ப்பண் பாடுகமழ் மக்கள் பேரர் ஏந்திப்
- பெருவாழ்வு வாழ்க உற்றார் பெற்றோரும் தமிழும் வாழ்க

# பிற அடிகள்

- இடையாகு கழி நெடிலடி - ஒன்பது அல்லது பத்து சீர்களைக் கொண்டது.
- கடையாகு கழி நெடிலடி - 11 முதல் 16 வரையான சீர்களைக் கொண்டது. இவை அரிதானவை.

# தொடை

- தொடை என்னும் செய்யுள் உறுப்பு பாடலில் உள்ள அடிகள்தோறும் ஒரு குறிப்பிட்ட வகையிலான ஓசை இயைபு (இயைபு=பொருத்தம்) வருமாறு பாடலை இயற்றுதல் பற்றி அமைகிறது.
- தொடுத்தல் என்பதிலிருந்து தொடை என்னும் சொல் பிறந்துள்ளது.
- ஓசை ஒழுங்கோடு தொடுக்கப்படுவதால் இதை நம் முன்னோர் தொடை எனக் குறித்தனர்.

# எட்டு தொடை வகைகள்
## (முதல் தொடைகள்)

- மோனை,
- எதுகை,
- இயைபு,
- அளபெடை,
- முரண்,
- இரட்டை,
- அந்தாதி,
- செந்தொடை.

# மோனைத் தொடை

- பாடலின் ஒவ்வோர் அடியிலும் முதல் எழுத்து ஒன்றி (பொருந்தி) வருவது. மோனைத்தொடை
- மோனை - சான்று :
- *உள்ளத்தில் உள்ளானடி - அது நீ*
  *உணர வேண்டு மடி*
  *உள்ளத்தில் காண்பாய் எனில் -கோயில்*
  *உள்ளேயும் காண்பா யடி*

# சீர் மோனை

- சீர்கள் தோறும் முதலெழுத்துக்கள் ஒன்றி வரின் அது சீர்மோனை எ.கா.
- கற்க கசடற கற்றவை கற்றபின்

# அடி மோனை

- அடிகள் தோறும் முதல் எழுத்து ஒன்றி வருவது அடிமோனை
- எ.கா.
- செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்

செல்வத்துள் எல்லாம் தலை

# எதுகைத் தொடை

- **பாடலில் இரண்டாவது எழுத்தெல்லாம் அடிகள் தோறும் ஒன்றி வருவது எதுகைத்தொடை.**
- **முதல் எழுத்தும் குறிலாகவோ, நெடிலாகவோ தொடர்ந்து அமைய வேண்டும்.**

**எதுகை - சான்று :**

- தன்னுயிர்க்கு என்னாமை தானறிவான் என்கொலோ
  மன்னுயிர்க்கு இன்னா செயல்.

# சீர் எதுகை

- **சீர்தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது சீர் எதுகை**
- **துப்பார்க்குத்** துப்பாய துப்பாக்கித் **துப்பார்க்குத்** துப்பாய தூஉம் மழை.

# அடி எதுகை

- **அடி தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது அடி எதுகை**
- **துப்பார்க்குத்** துப்பாய துப்பாக்கித் **துப்பார்க்குத்**

  துப்பாய தூஉம் மழை.

# இயைபுத் தொடை

- பாடலில் அடிகள் தோறும் கடைசி எழுத்துகள் ஒன்றுதல் இயைபுத்தொடை.
- ஒரு செய்யுளில் இயைபுத் தொடை நான்கு வகையில் அமைய முடியும்.
- ஒன்றுக்கு மேற்பட்ட அடிகளின் இறுதி எழுத்துக்கள் ஒன்றுதல்.
- ஒன்றுக்கு மேற்பட்ட அடிகளின் இறுதிச் சொற்கள் ஒன்றுதல்.
- ஒரு அடியில் ஒன்றுக்கு மேற்பட்ட சீர்களின் இறுதி எழுத்துக்கள் ஒன்றுதல்.
- ஒரு அடியில் இறுதிச் சொல் அந்த அடியில் வரும் இன்னொரு சீரிலாவது ஒன்றி வருதல்

சான்று : *வெய்யிற் கேற்ற நிழலுண்டு வீசும்*
*தென்றல் காற்றுண்டு*
*கையில் கம்பன் கவியுண்டு கலசம்*
*நிறைய மதுவுண்டு*
*தெய்வகீதம் பலஉண்டு தெரிந்து பாட*
*நீயுண்டு.*

# அளபெடைத்தொடை

- **பாடல் அடிகளில் முதற்சீர்கள் எல்லாம் அளபெடுத்து வருவது அளபெடைத்தொடை.**

**சான்று :**

- ஓஒ இனிதே எமக்கிந்நோய் செய்தகண்

தாஅம் இதற்பட் டது

# முரண் தொடை

- **பாடலில் அடுத்தடுத்த அடிகளின் முதல் சீர்கள் முரண்பட்டு வருவது முரண்தொடை**
- **சான்று :**
- **இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர் துன்பம் துடைத்தூன்றும் தூண்**

**முனைவர் பா. மலர், உதவிப் பேராசிரியர்,**

# அந்தாதித் தொடை

- **ஓர் அடியின் இறுதிச்சீரோ, அசையோ, எழுத்தோ அடுத்த அடியின் முதலாக வருமாறு எழுதுவது. அந்தம் ((முடிவு) ஆதியாக (அடுத்த அடியின் முதலாக)த் தொடுப்பது அந்தாதித்தொடை**

**சான்று :**

- *உலகுடன் விளக்கும் ஒளிதிகழ் அவிர்மதி*
*மதிநலன் அழிக்கும் வளங்கெழு முக்குடை*
*முக்குடை நீழற் பொற்புடை ஆசனம்*
*ஆசனத் திருந்த திருந்தொளி அறிவன்*

# இரட்டைத் தொடை

- **பாடலில் ஓர் அடி முழுதும் ஒரே சொல்லே வரத் தொடுப்பது இரட்டைத்தொடை.**

**சான்று** :

- *ஒக்குமே ஒக்குமே ஒக்குமே ஒக்கும்*
  ***விளக்கினிற் சீறெரி ஒக்குமே ஒக்கும்***
  ***குளக்கொட்டிப் பூவின் நிறம்***

# செந்தொடை

- **மோனை முதலாகிய தொடையும், தொடை விகற்பமும்(விகற்பம் = வேறுபாடு) போல் அமையாமல் வேறுபடத் தொடுப்பது செந்தொடை**

  **சான்று**
- ***பூத்த வேங்கை வியன்சினை யேறி***

  ***மயிலினம் அகவும் நாடன்***

  ***நன்னுதற் கொடிச்சி மனத்தகத் தோனே***

**முனைவர் பா. மலர், உதவிப் பேராசிரியர்,**

# நினைவில் நிறுத்த...

- அடி
- குறளடி சிந்தடி அளவடி நெடிலடி கழிநெடிலடி
- தொடை
- மோனை, எதுகை, இயைபு, அளபெடை, முரண், இரட்டை,அந்தாதி, செந்தொடை.

மொழிப் பாடம் - தமிழ் -தாள் -3 (S1TL31)

மூன்றாம் பருவம் இணைய வகுப்பு 05

# அணியிலக்கணம்

முனைவர் பா. மலர்,
உதவிப் பேராசிரியர்,
தமிழ்க்கலை ஆய்வகம் ,
தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி,
நாகர்கோவில் - 2

# இந்த வகுப்பில்...

- அணி
- உவமை அணி
- உருவக அணி
- வஞ்சப் புகழ்ச்சி அணி
- தற்குறிப்பேற்ற அணி

# திறவுச் சொற்கள்

- அணி
- உவமை
- உருவகம்
- வஞ்சப் புகழ்ச்சி
- தற்குறிப்பேற்றம்

# சிறுவினா

- உவமை அணியின் தனிச் சிறப்பினை விளக்குக.
- தொழில் உவமை யைச் சான்றுடன் விளக்குக.
- உவமேயம், உவமானம் விளக்குக
- வஞ்சப் புகழ்ச்சி - விளக்குக
- தற்குறிப்பேற்றம் என்றால் என்ன?

# பெரு வினா

- உவமை அணி குறித்து ஒரு கட்டுரை வரைக.
- உருவக அணியைச் சான்றுடன் விளக்குக.

# அணியிலக்கணம்

- அணி என்பதற்கு 'அழகு' என்பது பொருள்.
- செய்யுளில் அமைந்துள்ள சொல்லழகு, பொருளழகு முதலியவற்றைக் கூறுவது அணி இலக்கணம்.
- அணி இரு வகைப்படும்
- 1. சொல்லணி,
- 2. பொருளணி.
- யமகம், மடக்கு முதலான அணிகள் சொல்லணியில் அடங்கும். உவமை, உருவகம் முதலான அணிகள் பொருளணியில் அடங்கும்.

# பொருளணி

- பொருளணியில் அமையும் அணிகளுள்
- உவமை அணி
- உருவக அணி
- வஞ்சப் புகழ்ச்சி அணி
- தற்குறிப்பேற்ற அணி
- ஆகியன குறிப்பிட தகுந்தவை.

# உவமை அணி

- உவமை அணி பொருளணிகளில் தலைமை சான்றது.
- காலப்போக்கில் உவமை அணியிலிருந்து உருவகம், வேற்றுமை, ஒட்டணி முதலிய பல அணிகள் தோன்றின.
- இதனால் உவமை அணியைத் 'தாய் அணி' என்று கூறுவர்.

# உவமை அணியின் இலக்கணம்

- ஒரு பொருளுக்கும் மற்றொரு பொருளுக்கும் இடையே உள்ள ஒப்புமையை எடுத்துக் கூறுவது உவமை அணி.
- பலபொருள்களுக்கு இடையே உள்ள ஒப்புமையும் காட்டப்படலாம்.
- ஒப்புமை அடிப்படையில் உவமை மூன்று வகையில் அமையும்

1. பண்பு உவமை,
2. தொழில் உவமை,
3. பயன் உவமை.

# உவமை அணியின் இலக்கணம்

- உவமை அணியின் இலக்கணத்தை *பண்பும் தொழிலும் பயனும் என்று இவற்றின் ஒன்றும் பலவும் பொருளொடு பொருள் புணர்ந்து ஒப்புமை தோன்றச் செப்புவது உவமை*

*(தண்டி, நூற்பா. 30)*

- என்ற நூற்பா விளக்குகிறது.

# உவமை அணியின் 4 உறுப்புகள்

- 1) உவமை அல்லது உவமானம்
- 2) பொருள் அல்லது உவமேயம்
  3) ஒத்த பண்பு
- 4) உவம உருபு .
- புலவர் விளக்கிக் கூறக் கருதும் பொருள், 'பொருள்' அல்லது 'உவமேயம்' எனப்படும்.
- அப்பொருளை விளக்கவோ அழகுபடுத்தவோ அவர் இயைத்துக் கூறும் மற்றொரு பொருள் 'உவமை' அல்லது 'உவமானம்'. எ.கா.: *தாமரை போன்ற முகம்,*
- முகம்- உவமேயம். தாமரை-உவமானம்.

# ஒத்த பண்பு

- உவமேயத்துக்கும் உவமானத்துக்கும் பொதுவாக உள்ள இயல்பை சுட்டுவதுவே 'ஒத்த பண்பு'.
- எடுத்துக்காட்டு: *பவளம் போலும் செவ்வாய்*
- வாய்க்கும் பவளத்துக்கும் ஒத்த தன்மையாகிய 'செம்மை' (செம்மை-வாய்) இங்குச் சுட்டிக் காட்டப்பட்டிருப்பதைப் பாருங்கள்.
- உவமை உருபுகள் : உவமானத்தையும் உவமேயத்தையும் இணைக்கும் போல, புரைய, ஒப்ப, மான போன்றவை உவமை உருபுகள்.

# பண்பு உவமை

- பண்பு உவமை: ஒரு பொருளின் வடிவம், நிறம், சுவை, அளவு ஆகியவை அப்பொருளின் 'பண்பு' எனப்படும். இப்பண்புகள் காரணமாக அமையும் உவமை பண்பு உவமை ஆகும். (எ.கா):
  - *பவளத்தன்ன மேனி (பவளம் போன்ற உடல்)*
  - *வேய் புரை பணைத்தோள் (மூங்கில் போன்ற தோள்)*
  - *பால் போலும் இன்சொல் (பால் போன்ற இனிய சொல)*
- இங்குக் காட்டிய சான்றுகளில் முறையே பவளத்தின் நிறம் மேனிக்கும், மூங்கிலின் வடிவம் தோளுக்கும், பாலின் சுவை சொல்லுக்கும், உவமைகளாயின. இவ்வாறு பண்பு ஒப்புமை காரணமாக உவமை அமைந்தமையால் பண்பு உவமை ஆகும்.

# தொழில் உவமை

- ஒரு பொருளின் தொழில் அல்லது செயல் காரணமாக அமையும் உவமை தொழில் உவமை எனப்படும்.
- எ.கா.: *அரிமா அன்ன அணங்குடைத் துப்பின்*
  *திருமா வளவன்*
- (அரிமா-சிங்கம்: அணங்கு-துன்பம்: துப்பு-வலிமை)
- சிங்கத்தைப் போன்று பகைவருக்குத் துன்பம் தரும் வலிமையினை உடைய திருமாவளவன் என்பது இவ்வடிகளின் பொருள்.
- துன்பம் தருதல் என்ற தொழில் ஒப்புமை காரணமாக இது தொழில் உவமை ஆயிற்று.

முனைவர் பா. மலர், உதவிப் பேராசிரியர்,
தமிழ்க் கலை ஆய்வகம் , தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி, நாகர்கோவில் - 2

# பயன் உவமை

- ஒரு பொருளால் கிடைக்கும் பயன் காரணமாக அமையும்உவமை பயன் உவமை எனப்படும்.
- எடுத்துக்காட்டு: *மாரி அன்ன வண்கைத்*
  *தேர்வேள் ஆயைக் காணிய சென்மே*
- (வண்கை-கொடைத்தன்மை, காணிய-காண,சென்மே-செல்லுக)
- பொருள் -மழையை ஒத்த கொடைத் தன்மையை உடையஆய் வள்ளலைக் காண்பதற்குச் செல்வாயாக.
- மாரியால் விளையும் பயனும் வள்ளலின் கொடையால் விளையும் பயனும் ஒத்தலின் இது பயன் உவமை ஆயிற்று.

# பொருளொடு பொருள் ஒப்புமைப்படுத்திக் கூறும் முறை

- நான்கு வகையாகப் பொருள்கள் இயைத்து (ஒப்புமைப்படுத்தி)க் கூறப்படும்.
- ஒரு பொருளொடு ஒரு பொருளும்
- ஒரு பொருளொடு பல பொருளும்
- பல பொருளொடு பல பொருளும்
- பல பொருளொடு ஒரு பொருளும்

# எடுத்துக்காட்டு

- ஒரு பொருளொடு ஒரு பொருள்
  - *எ. கா. செவ்வான் அன்ன மேனி*
  - இங்கு 'வானம்' என்ற ஒரு பொருள் 'மேனி' என்ற ஒரு பொருளுக்கு உவமை ஆயிற்று.
- ஒரு பொருளொடு பல பொருள்
  - எ.கா: செவ்வா னன்ன மேனி யவ்வா னிலங்குபிறை யன்ன விலங்குவால் வையெயிற்
  - இங்குப் 'பிறைச் சந்திரன்' என்ற ஒரு பொருள் 'பற்கள்'(எயிறு) என்ற பல பொருளுக்கு உவமை.

# எடுத்துக்காட்டு

- பல பொருளொடு பல பொருள்
  - எ.கா: *சுறவு இனத்து அன்ன வாேளார் மொய்ப்ப*
  - 'சுறா மீன் கூட்டம்' - பல பொருள் தொகுதி,
  - 'வாள் ஏந்திய வீரர் குழாம்'- பல பொருள் தொகுதி உவமை.
- பல பொருளொடு ஒரு பொருள் - எடுத்துக்காட்டு:
  - எ.கா: *பெரும்பெயர்க் கரிகாலன் முன்னிலைச் செல்லாப் பீடு இல் மன்னர் போல* (பீடு-பெருமை; ஓடுவை-ஓடுவாய்) *ஓடுவை மன்னா? வாடை நீ எமக்கே?*
  - கரிகாலனை எதிர்க்க மாட்டாமல் தோற்று ஓடிய மன்னர்கள் பலர் தலைவன் வந்தவுடன் தலைவிக்கு முன் செயலற்று ஓடப் போகின்ற வாடையாகிய ஒரு பொருளுக்கு உவமை.

# உவமை அணியின் வகைகள் -24

1) விரி உவமை
2) தொகை உவமை
3) இதரவிதர உவமை
4) சமுச்சய உவமை
5) உண்மை உவமை
6) மறுபொருள் உவமை
7) புகழ் உவமை
8) நிந்தை உவமை
9) நியம உவமை
10) அநியம உவமை
11) ஐய உவமை
12) தெரிதரு தேற்ற உவமை
13) இன்சொல் உவமை
14) விபரீத உவமை
15) இயம்புதல் வேட்கைஉவமை
16) பலபொருள் உவமை
17) விகார உவமை
18) மோக உவமை
19) அபூத உவமை
20) பலவயிற்போலி உவமை
21) ஒருவயிற்போலி உவமை
22) கூடா உவமை
23) பொதுநீங்கு உவமை
24) மாலை உவமை.

# உருவக அணி

- உருவக அணி உவமை அணியில் ஒரு பொருேளாடு ஒரு பொருளை ஒப்பிட்டுக் கூறும் போது அவை ஒப்புமை உள்ள வேறுவேறு பொருள்கள் எனவே காட்டப்படும். ஆனால் சிலபோது உவமைக்கும் அது கொண்டு விளக்கப்படும் பொருளுக்கும் இடையிலான ஒப்புமை மிக அதிகமாக உள்ளது எனக் காட்ட விரும்புகிறார் கவிஞர்.
- 'தாமரை போன்ற முகம்' என்ற கவிஞருக்கு, இரண்டுக்கும் உள்ள ஒற்றுமை மிகுந்து, வேற்றுமை குறைவு எனத் தோன்றுகிறது. காலப்போக்கில் இரண்டினுக்கும் வேற்றுமை இல்லை; இரண்டும் ஒன்றே என்ற மனவுணர்வு தோன்றுகிறது, முகம் ஆகிய தாமரை என்கிறார். இங்கு முகமே தாமரை எனப் பொருள். இவ்வாறு உவமையணி யிலிருந்து உருவக அணி தோன்றுகிறது.

# உருவக அணியின் இலக்கணம்

- உருவக அணியின் இலக்கணம் உவமையாகின்ற பொருளுக்கும் (உவமானம்) உவமிக்கப்படும் (உவமேயம்) பொருளுக்கும் இடையிலான வேறுபாட்டை நீக்கி, அவை இரண்டும் ஒன்றே என்னும் உள்ளுணர்வு தோன்றுமாறு ஒற்றுமைப் படுத்திக் கூறுவது உருவகம் என்னும் அணியாகும். அதாவது **உவமேயத்தில் உவமானத்தை ஏற்றிக் கூறுதல்**.
- *உவமையும் பொருளும் வேற்றுமை ஒழிவித்து ஒன்று என மாட்டின் அஃது உருவகம் ஆகும் (தண்டி. 35)*

# உருவக அணி விளக்கம்

- உவமையணியில் உவமானம் முன்னும் உவமேயம் பின்னும் இருக்கும். இரண்டினுக்கும் ஒப்புமை காட்ட இடையில் போல, புரைய, அன்ன முதலான உவமை உருபுகளுள் ஒன்றுவரும். இவற்றை ஒற்றுமைப் படுத்துவதற்காக 'ஆகிய' என்ற உருபு இடையில் வரும். 'ஆக' என்ற உருபும் வருவதுண்டு. இவை 'உருவக உருபுகள்' என்று கூறப்படும். இவை மறைந்து வருதலும் உண்டு. *மலர்போன்ற கண், மலர்க்கண் - உவமை*
  *கண் ஆகிய மலர், கண்மலர் - உருவகம்*
- மலர் போன்ற கண் என்ற உவமையில் மலரும் கண்ணும் வேறு வேறு எனும் உணர்வு தோன்றுவதையும், கண் ஆகிய மலர் என்ற உருவகத்தில் கண்ணே மலர், கண்ணும் மலரும் வேறு வேறல்ல என்னும் உணர்வு தோன்றுவதையும் நீங்கள் காணலாம்.

# உருவக அணியின் 15 வகைகள்

- 1)தொகை உருவகம்
  2) விரி உருவகம்
  3) தொகைவிரி உருவகம்
  4) இயைபு உருவகம்
  5) இயைபு இல் உருவகம்
  6) வியனிலை உருவகம்
  7) சிறப்பு உருவகம்
  8) விரூபக உருவகம்
- 9) சமாதான உருவகம்
- 10) உருவக உருவகம்
  11) ஏகாங்க உருவகம்
  12) அநேகாங்க உருவகம்
  13) முற்று உருவகம்
  14) அவயவ உருவகம்
  15) அவயவி உருவகம்

# வஞ்சப் புகழ்ச்சி அணி

- புகழ்வது போலப் பழித்தும், பழிப்பது போலப் புகழ்ந்தும் கூறுவது வஞ்சப் புகழ்ச்சி அணி எனப்படும்.
- புறநானூற்றில் ஔவையார் பாடிய பாடல் ஒன்றில் வஞ்சப் புகழ்ச்சி அணி சிறப்பாக அமைந்துள்ளது.

*இவ்வே, பீலி அணிந்து, மாலை சூட்டி,*
*கண்திரள் நோன்காழ் திருத்தி, நெய்அணிந்து,*
*கடியுடை வியன்நகர் அவ்வே; அவ்வே,*
*பகைவர்க் குத்தி, கோடுநுதி சிதைந்து,*
*கொல்துறைக் குற்றில மாதோ .... ....*
*அண்ணல் எம்கோமான் வைந்நுதி வேலே*

# வஞ்சப் புகழ்ச்சி அணி

- அதியமான் போர்க்களம் பல கண்டவன். வெற்றி பல குவித்தவன். இருப்பினும் போரால் ஏற்படும் உயிர் இழப்புக் கண்டு மனம் வருந்திப் போரில் விருப்பம் இல்லாதிருந்தான். இந்நிலையில் தொண்டைமான் என்பவன் அதியமான் மீது போர் தொடுத்தான்.
- ஔவையார் போரைத் தடுத்து நிறுத்த வேண்டி அதியமான் பொருட்டு, தொண்டைமானிடம் தூது சென்றார். ஔவையாரை வரவேற்ற தொண்டைமான் தனது படைக் கொட்டிலை அழைத்துச் சென்று காட்டினான்.

# வஞ்சப் புகழ்ச்சி அணி

- அதைக் கண்ணுற்ற ஔவையார் அதனைப் புகழ்வது போலவும், அதே நேரத்தில் அதியமான் படைக்கலங்கள் இருக்கும் கொட்டிலை இகழ்வது போலவும் பின்வருமாறு பாடுகிறார்.
- 'தொண்டைமானே! இப்படைக் கலங்கள் மயில் பீலி அணிந்து, மாலை சூட்டி, திரண்ட வலிய காம்புகள் திருத்தி, நெய் பூசப்பட்டுக் காவலை உடைய உன் அரண்மனையிலே உள்ளன. ஆனால் எம் அரசனாகிய அதியமானின் வேல்களோ (படைக் கருவிகளோ) பகைவர்களைக் குத்தியமையால் நுனி முறிந்து கொல்லனுடைய உலைக்களத்தில் அன்றோ கிடக்கின்றன.

# வஞ்சப் புகழ்ச்சி அணி

- ஔவையார் தொண்டைமானுடைய படைக்கலங்களைப் புகழ்வதுபோல, அவன் போர்ச் செயல் செய்யாதவன் என மறைமுகமாக இகழ்கிறார். அதே நேரத்தில் அதியமானது படைக் கருவிகள் எல்லாம் கோடும் நுனியும் முறிந்து கொல்லனது உலைக்களத்திலே உள்ளன என்பதன் வாயிலாக, போர்கள் பலவற்றைச் செய்து வெற்றி கண்ட அவனுடைய வீரத்தை மறைமுகமாகப் புகழ்கின்றார்.
- இவ்வாறு தொண்டைமானைப் புகழ்வது போலப் பழித்தும், அதியமானின் பழிப்பது போலப் புகழ்ந்தும் பாடியுள்ளதால் இப்பாடல் வஞ்சப் புகழ்ச்சி அணி ஆயிற்று.

# தற்குறிப்பேற்ற அணி

- கவிஞர் தம்முடைய கற்பனைத் திறத்தைக் காட்டுவதற்குப் பாடலில் கையாளும் அணிகளில் மிகவும் குறிப்பிடத்தக்க அணி தற்குறிப்பேற்ற அணி.
- பாடலில் கவிஞர் ஏதேனும் ஒரு நிகழ்ச்சியைப் பாடுகின்றார். அந்நிகழ்ச்சி இயற்கையாக நடைபெறும் நிகழ்ச்சி. இயல்பாக நடைபெறும் அந்நிகழ்ச்சிக்குக் கவிஞர் தம் கற்பனையாக ஒரு காரணம் கற்பிக்கின்றார்.
- இதனால் தாம் கூறும் நிகழ்ச்சிக்குப் புதிய சுவை உணர்வைத் தருகிறார். பாடலைப் படிப்போர் நெஞ்சிலும் இத்தகைய உணர்வைக் கிளர்ந்தெழச் செய்கிறார். இதன் பொருட்டுக் கையாளப்படும் அணியே தற்குறிப்பேற்ற அணி.

# தற்குறிப்பேற்ற அணியின் இலக்கணம்

- *பெயர்பொருள் அல்பொருள் என இரு பொருளினும்*
  *இயல்பின் விளைதிறன் அன்றி அயல் ஒன்று*
  *தான் குறித்து ஏற்றுதல் தற்குறிப் பேற்றம்* *(தண்டி, நூ. 56)*
- பெயரும் பொருள், பெயராத பொருள் என்னும் இருவகைப் பொருளிலும் இயல்பாக நிகழும் நிகழ்ச்சி ஒழித்து, கவிஞர் தாம் கருதிய வேறு ஒரு காரணத்தை அவற்றின் மீது ஏற்றிச் சொல்லுதல் தற்குறிப்பேற்றம் அணியாகும்.
- *........... ............ செழுமணிக் கொடிகள் என்னும் (பால காண்டம், 563)*
  *கைகளை நீட்டி அந்தக் கடிநகர் கமலச் செங்கண்*
  *ஐயனை ஒல்லை வா என்று அழைப்பது போன்றது அம்மா*

# (பால காண்டம், 563)

- இராமன் வில் வளைத்துச் சீதையை மணக்க வேண்டி, விசுவாமித்திர முனிவருடனும், தம்பி இலக்குவனுடனும் மிதிலை மாநகரம் செல்கின்றான். அந்நகரத்து அருகில் செல்லும்போது, நகர் மதில் மேல் உள்ள கொடிகள் காற்றில் அசைந்தாடின.
- கொடிகள் காற்றில் அசைந்தாடுவது இயல்பாக நிகழும் நிகழ்ச்சி ஆகும். ஆனால் கம்பர், மதில் மேல் உள்ள கொடிகள் அசைந்தாடுவது, சீதையை விரைவில் வந்து மணம் புரியுமாறு இராமனைக் கை காட்டி அழைப்பது போல உள்ளது என்று தம் குறிப்பை ஏற்றிக் கூறுகிறார்.

# தற்குறிப்பேற்ற அணி வகை

- தற்குறிப்பேற்ற அணி இரு வகைப்படும்.
- 1.பெயர்பொருள் தற்குறிப்பேற்ற அணி,
- 2.பெயராத பொருள் தற்குறிப்பேற்ற அணி

# பெயர்பொருள் தற்குறிப்பேற்ற அணி

- *மண்படுதோள் கிள்ளி மதயானை, மாற்றரசர் வெண்குடையைத் தேய்த்த வெகுளியால், - விண்படர்ந்து பாயும்கொல் என்று பனிமதியம் போல்வதூஉம் தேயும் தெளிவிசும்பில் நின்று*
- நிலவுலகத்தைத் தாங்கிய தோள் வலிமையை உடைய சோழனுடைய மதயானையானது, பகை அரசர்களுடைய வெண்கொற்றக் குடையைச் சீறிச் சிதைத்தது கோபத்துடன், அக்குடையைப் போல தன் மேலும் வானை நோக்கி வந்து பாயுமோ என்று அஞ்சி, குளிர்ச்சி உடைய முழு நிலவானது வானத்தில் நின்று தேய்கின்றது.

# பெயர்பொருள் தற்குறிப்பேற்ற அணி அணிப்பொருத்தம்

- இப்பாடலில் கூறப்பட்ட பொருள் வானத்தில் உள்ள சந்திரன் ஆகும். இது பெயரும் பொருள் ஆகும். அதன் இயல்பு வளர்தலும் தேய்தலும் ஆகும். தேய்தல் நிலவில் இயல்பாக (இயற்கையாக) நிகழும் தன்மை. ஆனால் கவிஞர் அது இயல்பான நிகழ்வு என்பதை ஒழித்து, 'சோழனுடைய மதயானை பகை அரசர்களுடைய வெண்கொற்றக் குடையைச் சீறிச் சிதைத்த சினத்தாலே, அக்குடையை ஒத்த தன் மேலும் வந்து பாயுமோ என்று அஞ்சியே தேய்கிறது' என்று தாம் கருதிய வேறு ஒரு காரணத்தை ஏற்றிக் கூறியதால் இப்பாடல் பெயர்பொருள் தற்குறிப்பேற்ற அணி ஆயிற்று.

# பெயராத பொருள் தற்குறிப்பேற்ற அணி

- *வேனில் வெயிற்கு உலர்ந்த மெய்வறுமை கண்டு இரங்கி,*
  *வானின் வளம்சுரந்த வண்புயற்கு, - தான்உடைய*
  *தாதும் மேதக்க மதுவும் தடஞ்சினையால்*
  *போதும் மீதுஏந்தும் பொழில்*
- முதுவேனில் காலத்தில் கதிரவன் வெயில் வெப்பம் தாளாமல் உலர்ந்து மேனி வாடியது சோலை. அதைக்கண்டு இரங்கி, வானிலிருந்து மழைவளத்தைப் பொழிந்தது கார்மேகம். அச்செயலுக்குக் கைம்மாறாகச் சோலை, தன்னிடத்தில் உள்ள பெருமை பொருந்திய மகரந்தம் நிறைந்த மலர்களையும், தேனையும் நிறைந்த தன் பெரிய கிளைகளாகிய கைகளால், மேகத்திற்குத் தருவதற்காக, மேல்நோக்கி ஏந்தி நிற்கிறது.

# பெயராத பொருள் தற்குறிப்பேற்ற அணி அணிப்பொருத்தம்

- இப்பாடலில் கூறப்பட்ட பொருள் 'பொழில்' ஆகும். இது பெயராத பொருள் ஆகும். பொழில் தன்னிடத்தில் வளர்ந்து ஓங்கிய மரக் கிளைகளில் தாதும் பூவும் தேனும் கொண்டிருத்தல் இயல்பாக நிகழும் தன்மையாகும். ஆனால் கவிஞர் அத்தன்மையை ஒழித்து, 'வேனில் காலத்தில் தனக்கு வெயிலின் வெப்பம் தீர்த்து உதவிய மழைமேகத்திற்குக் கைம்மாறாகக் கொடுப்பதற்காக அப்பொழில், தன் கிளைகளாகிய கைகளால் தாதையும், மலரையும், தேனையும் ஏந்தி நிற்கும்' எனத் தாம் கருதிய வேறு ஒரு காரணத்தை ஏற்றிக் கூறுவதால் இப்பாடல் பெயராத பொருள் தற்குறிப்பேற்ற அணி .

# நினைவில் நிறுத்த

- அணி - சொல்லழகு, பொருளழகு
- உவமை அணி
- 'தாய் அணி ' பொருள்களுக்கு இடையே உள்ள ஒப்புமையைக் கூறுவது
- உருவக அணி
- உவமானம் ,உவமேயம் - இரண்டும் ஒன்றே என்று கூறுவது
- வஞ்சப் புகழ்ச்சி அணி
- புகழ்வது போலப் பழித்தும், பழிப்பது போலப் புகழ்ந்தும் கூறுவது
- தற்குறிப்பேற்ற அணி -புலவன் தன் குறிப்பை ஏற்றிக் கூறுவது